
41

திருவிளையாடற் புராணம்

# மாணிக்கம் விற்ற சிந்து.

4 - JAN 1924



P. M. ஷண்முகம் செட்டியார்.

உ

முருகன் துணை

4 - JAN 1921





திருவிளையாடற்புராணம்

# மாணிக்கம்விற்ற சிந்து.

இது

மதுரை ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரர் தேவஸ்தானம்
கமிட்டிமெம்பரும், மதுரை, இராமநாதபுரம்
ஜில்லா போர்டு மெம்பரும், மதுரை
முனிசிபல்கவுன்சிலரும், மதுரைக்
காலேஜ் போர்டு மெம்பருமான

**P. M. ஷண்முகம் செட்டியாரவர்களால்**

இயற்றப்பெற்று

மேற்படியாரால்

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

1923.

894.8111
2602

Q23:4V
N74

18027

# சாற்றுக் கவிகள்.

---

மதுரைக் காலேஜ் பிரதம தமிழ்ப்பண்டிதர்

**B. B. சுப்பராமையரவர்கள் சொல்லியது.**

சேமமுறச் சுந்தரத்தே தென்ன ரிளங்கோக்கா
மாமதுரை வந்தேநன் மாணிக்கம்—ஏமமுற
விற்றதனைச் சிந்தாய் விளம்பினான் சண்முகவேள்
கற்றமுறை தான்தொகுத்தே காண்.

---

மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகளாதீனம் வித்துவானும்
செயிண்ட்மெரி ஸ்கூல் தமிழ்ப்பண்டிதருமாகிய

**மு. கோவிந்தசாமி ஐயரவர்கள் இயற்றியது.**

புவனமொரு மூன்றிலுமீ டில்லாத பெருமையுறு
புனிதம் வாய்ந்து
பவமதனை யகற்றால வாய்ப்பெருமா னாடலறு
பத்து நான்கில்
நவமணிகள் விலைபகர்ந்த விளையாட்டைச் சிந்தாக
நவின்றான் மற்றோர்
உவமையிலா நற்குணங்கொள் சண்முகனும் பெருவணிக
னுவக்க மாதோ.

181027

---

மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்க நிரந்தர அக்கிராசனாதிபதி
யும், திரிசிரபுரம் நாஷனல் காலேஜ் தலைமைத் தமிழ்ப்
பண்டிதரும், விவேகோதயம் பத்திராதிபருமான

**ம. கோபால கிருஷ்ணையரவர்கள் சொல்லியது.**

எண்முகமுமேத்திசைகொளெழிலாலவாயிறைவன் இயைந்துமேனாள்
வண்முகமார் வணிகனென நவமணியும் விற்றதிரு மான்மியத்தைத்
தண்முகமனாதிமிளிர் வோனெனது மாணவகன் தகைமை சான்ற
சண்முகவேள்பாண்செழுநற்சிந்துவினிற்செய்துபுகழ்தழைத்தான் மன்னோ.

---

பேரையூர் வித்துவான் சோடசாவதானம்

## மீனாக்ஷிசுந்தரக் கவிராயரவர்கள் சொல்லியது

வான்முகவெண் பிறைபணிந்தான் மணிபகர்சீர் புலவர்செவி
வாயிற் செஞ்சொற்
றேன்முகந்து சிந்துசிந்து நறுந்தமிழி னாலேக
சிந்து சொற்றான்
மேன்முகம னோடமதுரை வைசியசண் முகவேளிவ்
விதத்தை யோர்ந்தே
நான்முகனான் முகனானன் நான்முகன்சண் முகற்கிணைக்கா
னாவலோரோ.

---

பேரையூர் வித்துவான்

## சண்முகம்செட்டியாரவர்கள் சொல்லியது.

எதிர்த்தேனுங் தமிழ்க்கூட லிறைபகர்மா ணிக்கவிளை
யாடல் தன்னைத்
துதிக்கேற்கத் தமிழ்ச்சிந்தாய்ச் சொற்சுவையும்
பொருட்சுவையுந் துலங்கச்சொன்னான்
மதித்தேவி னுடலுரிஞ்சுங் கொடிமாடப் பார்த்திபனூர்
வைசியர் சார்பில்
உதித்தோன்சண் முகவலவன் றிருவால வாய்ப்பதியி
லுறைந்துள் ளோனே.

---

உ

சிவமயம்.

# திருவிளையாடற் புராணம்:

# மாணிக்கம்விற்ற சிந்து.

## விநாயகர் துதி.

(திருவுற்றிலகு கங்க என்ற சந்தம்.)

மதுரத்த மிழிலங்கு மதனப்பு லவர்சங்க
மதுரைப்ப திவிளங்கு மந்திரன்—மதி
வதனக்க யல்விழியாள் சுந்தரன்—திரு
மாநகர்விளை யாடலோரறு பானுடேவரு நாலதேதரு
மறைமிக்க வும்புகழ்கை மானவன்—அன்பர்
குறைமிக்க வுங்களைபெம் மானவன். (1)

வதியப்பி றந்திறக்கக் கதியைச்சு ரந்தளிக்கும்
மகிமைத்து வாதசாந்த ஈசனும்—கயல்
வகிபொற்று வசர்குல நேசனும்—தென்னன்
மாசிலாமுடி சூடவேவணி கேசனும்மது ராநகர்நவ
மணிவிற்ற வன்சரிதை கூடவே—பொருள்
திணியத்த மிழிற்சிந்து பாடவே. (2)

சுரர்மிக்க யன்முகுந்த னரனைச்ச ரண்புகுந்து
துதிபைச்செ யவெழுந்த மேலவன்—மறை
விதியைச்சி றைகொணர்ந்த வேலவன்—முனஞ்
சூருறிய கோரமேவிடு தீரதானவ வேர்களைதரு
சுருதிக்கு மான்முன்னந் தோன்றவன்—வலபை
இரதிக்க மூகிகொண்ட சான்றவன். (3)

வரையிற்ப ரதவம்சர் சரிதைப்பு கழ்வரைந்து
வடிவிற்றி கழவந்த கோட்டினன்—கவிஞர்
முடியிற்ப ணியமுந்து பாட்டினன்—குற
மாவனுளுறை யேனலார்குக னுவலோடமை யானையாகிமுன்
வனமுற்ற ருள்பதங்கள் போற்றியே—சாண்
தினமுற்றி டுவமுள்ள மேற்றியே. (4)

## சுப்பிரமணியர் துதி.

(கண்ணாயிரம் படைத்த என்ற சந்தம்.)

பொன்னாடு மிக்குரைக்குந் தென்னாடு புக்குதித்த
புனிதவிழிக்கயல் தனையனெனப்புகழ் ஈண்டிய—செண்டு
பணிவரையிற்புக நனிபுடையுக்கிர பாண்டிய. (1)

ஒன்னார்ப டைத்தலைவர் நின்னா யிற்புகுத்த
ஒளியமுதுக்கொடு விளையுமமர்க்கள முற்றவா—ஓடித்
திளையசூர்க்குல முளையொடுறுத்துமுன் செற்றவா. (2)

கண்டாசை யாற்குறவர் பெண்டாளு வான்கிழவர்
காவுருவால்முன மிரவினில்மேவிடு காமியே—உயர்
பிரணவவான்பொருள் தாணிமகிழ்ந்தருள் சாமியே. (3)

மண்ணார்ப ரங்கிரியில் விண்ணார்பு ரந்தானு
மனமகிழ்வாலளி வனிதையையாள்மண வாளனே—புவி
தனிலடியார்குறை நனிகளைதீனத யாளனே. (4)

சங்கக்க டல்குடித்த சங்கத்த மிழ்வளர்த்த
தலைவாகத்தியர் நிலவுகலைக்குரு தாசனே—திரு
மலைகளி னற்குகை பொலியமுளைத்தரு ளீசனே. (5)

திங்கட்ச டைமுடித்த வங்கப்பொ ருப்பர்நெற்றி
திகழுவிழிக்கன லுகுபொறியிற்பொலி சேயனே—உமை
புகழுமடித்தல முகவடி வுற்றெழு தூயனே. (6)

சீராழி யிற்றுயிலு நாராய ணற்கினிய
திருமயிலிற்பொலி மருகனெனத்துதி சேந்தனே—ஒரு
சரவணநற்றட மருவியுதித்தெழு சாந்தனே. (7)

சீராக சித்தமன நேராக வைத்துனது
திருவடியிற்பணி தருமடியற்கருள் சீலனே—இங்ஙன்
விரவியசொற்றொடை யுரைதரவெற்கருள் வேலனே. (8)

## நூல் வரலாறு.

(பாளைவாய் கமுகில் வந்தூர் என்ற சந்தம்.)

மானிலம்பு கழ்பரந்த வானிளம்பொ ழில்குவிந்த
மாமதுரை மன்னவாம் பாண்டியர்—குலஞ்
சேமமுற வந்தார்வீர பாண்டியர். (1)

மீனுலாவுந் தோரணங்கள் வானளாவுஞ் சீருயர்ந்த
விதிநகர் நீதிவழி யாண்டவன்—எட்டு
மாதிரமு மேவுபுகழ் பூண்டவன். (2)

ஆருமிந்த வாகைமன்னன் போகமாத ராகிவந்த
அன்னநடை யார்புதல்வர் கூடினர்—பட்ட
மன்னரசி சேயரின்றி வாடினர். (3)

நாகிளங்கு மாரர்மேவி யாகவங்க யற்கணம்மை
நாதர்மகிழ் நோன்புபல போற்றினர்—மன்னன்
மாதுகுலத் தேவியொடு சாற்றினர். (4)

இத்தகைய நோன்புபல பத்தியுட னேற்றெழுக
எந்தைசோம சுந்தரேசர் தந்தனர்—அருள்
மைந்தனிளங் கோமகனும் வந்தனர். (5)

அத்தனிக்கு மாரனுக்கு வைத்தசாத கத்தொழிலோர்
அன்றுவேந்து மூழ்வலியாற் சென்றுமே—வேட்டை
துன்றுவேங்கை வாய்க்கிரையாய்ப் பொன்றுமே. (6)

வேங்கைவாய்ப்பட் டாங்கவனு மோங்குவானை நாடியேக
மேவிமாதர் கண்பொழிந்தார் வெள்ளமே—தங்கள்
ஆவிநாத ரெண்ணிநொந்தா ருள்ளமே. (7)

ஈங்குவேந்தன் மாதர்துன்பி லேங்கபோக மாதர்மைந்தர்
ஈண்டியுற்ற சங்கமங்கள் தேடினர்—மன்னன்
பூண்டகொற்ற மௌலியொடு மோடினர். (8)

சிந்தைமிக்கு கந்தமன்னன் மந்திரக்கி ழவர்தங்கள்
தென்னரிளங் கோவின்மனந் தேற்றியே—துஞ்சு
மன்னனிறு திக்கடன்க ளாற்றியே. (9)

மைந்திளங்கு மாரருக்கு கந்தமுடி சூட்டுகாதல்
மந்திரிகள் பொன்னறைக்கண் வந்தனர்—மன்னன்
சந்தமுடி கண்டிலாது நொந்தனர். (10)

தாட்டிகத்தால் மாற்றலர்கள் கூட்டுண்டோடு மாற்றலென்று
தாமுணர்ந்து மெத்தநொந்து வாடினர்—வேறு
மாமுடிச மைக்கவுள்ளம் நாடினர். (11)

மீட்டுமொளவி வேறுசெய்து சூட்டமணி யேதுமில்லை
வேதனின்றேல் மாந்தர்துன்ப வாசரோ—இனி
ஆர்துணைமீ னாட்சிசுந்த ரேசரே. (12)

என்றிளங்கோ வோடுமன்னன் முன்றினின்றெ மெந்தைசுந்த
ரேசர்கோபு ரத்துவாயி லுந்தவே—நாடு
மாசிலாவ மைச்சரேக முந்தவே. (13)

துன்றுமார்பி லாரமாலை சென்றிலங்க வேதமுந்நூல்
தோன்றியேவ லம்படப்பி றங்கவே—மன்றம்
ஊன்றியாடுந் தாணிலத்திற் றங்கவே. (14)

செங்கதிரி ரத்தினங்க ளங்கதப்பு யஞ்சுமந்து
தென்னர்குலத் தேவர்மணி கூவியே—முன்னந்
துன்னியோர்வ ணிகராகி மேவியே. (15)

இங்குநீவிர் சிந்தைநொந்தே யெங்குபோகி நீர்கணேதல்
யாதுசெய்தி யோதுவீர்க ளென்றனர்—அவர்
நாதனிடம் யாவையும்பு கன்றனர். (16)

இவ்வகைய மைச்சர்தங்கள் கவ்வையெல்லா முற்றுணர்ந்தே
எந்தையாம்வ ணிகரீதி யம்பவே—கூடி
மந்திரக்கி ழவரெல்லாம் பம்பவே. (17)

கவ்வையேதான் மெத்தவுநீ ரிவ்வகையேன் கொள்ளுகின்றீர்
காந்தரவ ரத்னமுள்ளேன் காணுவீர்—விலை
போந்தபதி னாயிரம்பொன் பேணுவீர். (18)

என்றுசொல்லி யேவணிக ரின்புடனே ரத்னமெல்லாம்
இட்டடைவிற் காட்டுவான்கி முக்கினில்—உற்றுக்
கொட்டியேம ணியெலாம்வ முக்கினில். (19)

இன்றிவணு ளிர்மணிக ளன்றுறைவ லாசுரன்றன்
இன்னுடற்கின் னங்களாய டங்குமே—என்று
அன்னவரா லாறுகள்தொ டங்குமே. (20)

மேலருவ லாசுரனு மூவரின்மு தல்வரேற்றின்
மேலவரா மீசர்பாத மேத்துவன்—முன்னஞ்
சீலமுட னற்றவங்கள் சாத்துவன். (21)

சேவடிய ருச்சனைக ளாவலுடன் செய்தவத்தால்
சென்றுசிவன் யாதுவேண்டு மென்றனன்—வலன்
அன்றிதைம கிழ்ந்திரந்து நின்றனன். (22)

(பொன்னுலவு சென்னிகுளஎன்ற சந்தம்.)

பொன்னுலகி லொன்னலர்கள் மன்னமரி லென்னுடலம்
போழ்ந்திடவா வரம்வேண்டும் மற்றுமே—வினை
சூழ்ந்திறந்தி டிலெனுடல் முற்றுமே—எனப்
போரிலேகொலு வோருமேயணை வோருமேவிழை சீரதேபெறு
போற்றுநவ மணியாக வேண்டுமே—என
ஏற்றுமையி னேசர்தரப் பூண்டுமே. (23)

இன்னவர மன்னிவல னுன்னியமர் பொன்னுலகம்
ஏகியேதே வேந்திரனோ டேற்கவே—மன்னன்
போகியும்போ ராற்றலனுய்த் தோற்கவே—இவன்
என்றுமேயுயிர் பொன்றிடாவரன் வென்றியேயமர் துன்றினேருவன்
ஏற்றதோரு பாயமிவ ணுற்றுவன்—கொன்று
கூற்றுவனு லகுகுடி யேற்றுவன். (24)

சிந்தையிதை யுந்திமன்ன னிந்திரன்து றந்துபடை
தேவர்கள டங்கலும்பின் செல்லவே—வலன்
மேவியரு குற்றுனிதைச் சொல்லவே—இகல்
தீரனேபுய வீரனேபரி வாரனேசிவ னாருள்பெறு
தேசிகாவு னதுகீர்த்தி மல்கவே—உனக்
காசையெது வேண்டுவரம் நல்கவே. (25)

இந்தமொழி வந்துவல னுந்துசெவிப் பொந்துறவும்
என்றவிரு கையையும்பு டைத்தனன்—இடி
போன்றநகை தந்திகழ்ந்தி டித்தனன்—எந்தை
ஈறிலானுமை கூறினுன்வர மேறுவேனது தேறிடாதுநீ
இன்னவிதந் தந்தனையி டித்துரை—உனக்
கென்னவரம் வேண்டுமோபி டித்துரை. (26)

என்றவுண னன்றுடன வின்றமொழி சென்றுறவும்
இந்திரன்ம கிழ்ந்திடது பாகமே—வுமை
சுந்தரன்ம லையதிலோர் யாகமே—செய்ப

ஏகவேபரி வாகவேயுளன் யாகவாவென வாகுவாயவன்
ஈதென்வா மென்றதிக வேகமாய்—உடன்
ஓதவலன் சொன்னனதி யூகமாய். (27)

அன்றொருவன் பொன்றிமுது கொன்றுவச்ர மொன்றையிய
அன்பினோர்பு கழுடம்ப டைந்தனன்—யானோ
மன்புகழு டம்பிரண்ட டைந்தனன்—அவை
யாதெனிலமர் மீதுறுஞ்செய மோதுமொன்றுயிர் சாதல்பின்னுடல்
யாவுமணி யாதலொன்று மாகுமே—இனி
மேவலரீ யல்லநண்பன்—ஏகுமே. (28)

ஆயமக மேயசுா சேயஅவீ யாயருந்தும்
அவ்வறம்பு கழெனக்கே யாயவை—யானும்
அவ்விடம்ப சுவெனவே போயவை—புற
ஆவலோமிக மேவுதேமக வாவதாகுவ னேகுவாயவ
ணார்க்குமேகொ டைபெருமை யாயது—அன்றிப்
பார்க்குளிரத் தலிழிபே தீயது. (29)

சேயவரை போயுரையென் றுயவற்கு நேயமுடன்
செப்பிமைந்த னுக்காசு சேர்த்துமே—மறை
ஒப்புமா பின்பசுவா யார்த்துமே—அங்கு
தேவரானவர் யாவரும்புக ழாவதாய்முன மேவியேவலன்
சிந்தைகரு வங்கொளவே கிட்டினன்—யூபம்
முந்தியெனைக் கட்டுமென்றே யொட்டினன். (30)

(என்னடி நான்பெற்ற மங்கைஎன்ற சந்தம்.)

என்னவு மேதர்ப்பை கொண்டு
இணை கண்டு மறை விண்டு—தூணில்
யாத்தன ரேசுரர் பண்டு—பொலி
இகலேறிடு வரியேறென மிகவேவரு வலனாருயிர்
ஈர்த்துடன் மாய்த்தனர் நண்ணி—மலர்
தூர்த்திட வேற்றினர் விண்ணில். (31)

இன்னவி தஞ்சிவ நேசன்
அசு ரேசன் அன்பின் வாசன்—புவி
எங்கும்பு கழ்தவ தேசன்—ஏக

இசைமேவிடு வலனாகிய பசுநாபியின் வபைவாங்கியே
இந்திரன் வானவர் பாகம்—உணத்
தந்துமே செய்தனன் யாகம். (32)

அத்தகை யாவினி ரத்தம்
அத னைத்தும் புவி நித்தம்—ஒளிர்
அம்மாணிக் கம்மாகும் முத்தம்—பற்கள்
ஆகுமேவயி டூரியஞ்சிகை யாகுமேதக மாகுமே நிணம்
ஆமரக தமே பித்தம்—இனி
ஆகும் வயிரமே யத்தம். (33)

இத்துகிர் செந்தசை யாலம்
ஒளி காலம் கண்கள் நீலம்—புட்ப
ராகமு மேகப சிலம்—என்னும்
இம்மாதிரி வாலாயின அம்மாநவ மணியானவை
இன்னுமி தன்நிறஞ் சாதி—முறை
பின்னவி லுகிறே னோதி. (34)

செம்மணி யாகுமா ணிக்கம்
அது மிக்கும் விளை பக்கம்—யுகம்
செப்புநான் கின்முறை மக்கம்—காளம்
தெளிவாயுரை தும்புரஞ்சிங் களமாமெனு மின்னான்கிடம்
தேருவி ரின்னுநி றங்கள்—ஒன்ப
தாருமா மன்னவி தங்கள். (35)

---

33-34. அத்தகைய வலாசுரனது உடற்சின்னங்களாகிய இரத்தம், பற்கள், சிகை, நிணம், பித்தம், அஸ்தம், தசை, கண்கள், கபம் இவைகள்முறையே மாணிக்கம், முத்து, வயிடூரியம், கோமேதகம், மரகதம், வஜ்ரம், பவளம், நீலம், புட்பராகம் என்னும் ஒன்பது மணிகளாயுதித்து விளங்கின என்று சொல்லப்படும்.

35. மாணிக்கமானது கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் இந்நான்கு யுகங்களினும் முறையே மக்கம், காளம், தும்புரம், சிங்களம் என்னுமிவ் விடங்களில் விளையும்.

செம்மரை மாதுளம் பூவும்
அது மேவும் விதை தாவும்— அழல்
செங்கழு நீரொளி தூவும்— இருள்
சிவணப்புவி வருமின்மினி நாரத்தங்கனி கருநாந்தமும்
செப்புவா பேயொளிர் தீபம்— இனி
ஒப்புவா யேயிந்த்ர கோபம். (36)

இந்நிற மாணிக்கஞ் சாதி
அது வோதில் வேத ராதி— நால்வர்
இயல்பினி லேயெட்டிற் பாதி-- அவை
இந்துசாத ரங்கங்குரு விந்தமுஞ்சௌ கந்திகோவரங்
கென்பவை யாமுறை யானே— அவை
தன்னிறஞ் சொல்லுவன் யானே. (37)

இன்னதிற் சாதரங் கத்து
நிறம் பத்து மாது ளத்து— மலர்
இதழுட னேயதன் வித்து— தழல்
இரவிபெமறை கருநெய்தலொ டுமின்மினி யொளிதீபமும்
இந்திர கோபமே மேகம்— இவை
தந்திடு மன்னிற மாகும். (38)

---

36. பொதுவகையால் மாணிக்கத்தினிறம் செந்தாமரை, மாதுளம்பூ, மாதுளம்விதை, அக்கினி, செங்கழுநீர், மின்மினி, நாரத்தங்கனி, தீபம், இந்திரகோபம் ஆகிய இவ்வொன்பதின் நிறம் பொருந்தும்.

37. மாணிக்கத்தின் வகை சாதரங்கம், குருவிந்தம், சௌகந்தி, கோவாங்கம் எனநான்கென்றும் அவைமுறையே பிரம, க்ஷத்திரிய, வைஸ்ய, சூத்திர ஜாதியென்றும் சொல்லப்படும்.

38. சிறப்புவகையால் சாதரங்கத்தின் நிறம் பத்தாகும். அவை மாதுளம்பூ, மாதுளம்வித்து, அக்கினி, சூரியன், செந்தாமரை, கருநெய்தல், மின்மினி, தீபம், இந்திரகோபம், மேகம் ஆகிய இவைகளினிறம் பொருந்தும்.

(தெள்ளுதமிழுக்குதவு சீலன் என்ற சந்தம்.)

சேந்தகுரு விந்தநிற மெட்டு—முயற்
செவ்வரத்தஞ் செவ்வரத்த மொட்டு—குன்றி
திலக மோத்தமுட னிலவ முண்முருக்கம்
சேரே பொன்னு மோரே. (39)

காந்துசௌகந் திக்குநிற மாறு—குயிற்
கண்ணிலவம் போதசோகிற் கூறு—தளிர்
கான்று மம்பொன்மரு தோன்றிசெம்பஞ்சியும்
காணே யுளம் பேணே. (40)

கொள்ளினிக்கோ வாங்கினிறம் நாலே—யவை
குராமலர்கு சும்பைமலர் போலே—இன்னுங்
கொவ்வை யாங்கனியுஞ் செவ்வையாஞ் செங்கலும்
கூறே நனி தேறே. (41)

விள்ளரிய செம்பதும ராகம்—பொது
வின்வகையிற் சோதனைக ளாகும்—அவை
மேலுங் கீழுர்புடை யாலு மேயொளிகள்
வீசில் முறை பேசில். (42)

உத்தமமே மத்திமம தன்மம்—என
ஒங்கியுரைப் பாயேகுண நன்மம்—இனி
உற்று சாதரங்கம் பெற்று மேயணிகு
வோர்கள் பெறுஞ் சீர்கள். (43)

---

39. இனி குருவிந்தநிறம் எட்டாகும். அவை முயலிரத்தம், செவ்வரத்தமலர், குன்றிமணி, வெள்ளலோத்தமலர், இலவங்கனி, முண்முருக்கமலர், மஞ்சாடிப்பூ, பொன்னிறம் ஆகிய இவைகளின் நிறம்பொருந்தும்.

40. சௌகந்தி நிறம் ஆறாகும். அவை குயிற்கண், இலவம்போது, அசோகந்தளிர், சுடுபொன், மருதோன்றி, செம்பஞ்சு ஆகிய இவைகளின் நிறம் பொருந்தும்.

41. கோவாங்கின்நிறம் நாலாகும். அவை குராமலர், குசும்பைமலர், கொவ்வைக்கனி, செங்கல் ஆகிய இவைகளின்நிறம் பொருந்தும்.

42. மாணிக்கத்திற்குப் பொதுவகையாற்குணம் பரிசோதனையாவது, ஒளியானது, மேல்நோக்கி வீசில் உத்தமஜாதியென்றும், கீழ்நோக்கிவீசில் மத்திமஜாதியென்றும், சுற்றுப்பக்கத்தில்வீசில் அதமஜாதியென்றும் சொல்லப்படும்.

புத்திதரு கல்வியுமே மன்னி—பசுப்
புத்தறுசு வையமுது கன்னி—கொண்டு
புரியுந் தானப்பயன் பரியின் யாகப்பயன்
புகுமே நலன் மிகுமே. (44)

பாங்கில்குரு விந்தமுங்கை யாள்வார்—அவர்
பார்முழுது மோர்குடையி னுள்வார்—இனிப்
பாவ வேசௌகந்தி திருவொ டேபுகழும்
பல்கும் தினம் மல்கும். (45)

ஈங்கினிக்கோ வாங்கமேபொ ருந்த—வர்க்கே
யேற்றமுடன் பால்பெருகும் விந்த—மென
ஈனவேதனமும் தானி யம்பிறவு
மெங்கும் முறப் பொங்கும். (46)

எள்ளியிடு குற்றமெலா நீங்கி—ஒளி
யிட்டிருளை யோட்டுகுண மோங்கி—யுயர்
வேய மாணிக்கத்தை யேய ணிந்தவர்கட்
கியைந்தே யுட னயந்தே. (47)

தெள்ளுமணி யேனையவை யாவும்—உறச்
சேர்ந்தவரி டத்தினிலே மேவும்—மற்றுஞ்
செல்வ மேபிறவு மல்க வேபுகழுஞ்
சேரும் தின மாரும். (48)

---

44. சாதரங்கம் அணியப்பெற்றோர் வித்தியாதானம், கோதானம், அறுசுவையமுதுதானம், கன்னிகாதானம், அஸ்வமேதயாகம் ஆகிய இவைகளின் பலனையடைவார்கள்.

45. குருவிந்தம் அணியப்பெற்றோர் பூவுலகமுழுதும் ஏகசக்ராதிபதியாய் அரசாளப்பெறுவார். சௌகந்தியணிவார் செல்வமும், புகழும் தினந்தோறும் தம்மிடத்தே நிறையப்பெற்று வாழ்வார்.

46. கோவாங்கமணிவார் விந்தமலையையொப்பத் தனம், தானியம், பசு,புத்ராதி சகலஐஸ்வர்யங்களுடனும் வாழ்வார்.

48. இன்னும் குற்றத்தினீங்கிக் குணத்திறேங்கியதான மாணிக்கத்தையணியப் பெற்றோருக்கு ஏனையமணிகள்யாவும் தாமே அவரிடத்தில் வந்தடையும்.

புள்ளியொடு புள்ளடியும் வேற்றும்—நிறம்
போந்துறனு மேதாசம் கீற்றும்—என்னப்
புகலு மாமணியின் துகள்க ளாமிவைகள்
போக்கி குணம் நோக்கி. (49)

நல்ளுருகுண மாமணிகள் தானும்— அணி
நாயகனோர் சிற்றரச னேனும்—கடல்
ஞாலம் யாவையுமே சால வேயவனை
நாடும் உறப் பீடும். (50)

இன்னுமவை பூண்டவரைப் பேயும்—கொடு
எமனது கோபமுமே நோயும்—இன்னல்
எது பாம்புகளே யாதி கோண்மிருகம்
ஈண்டா மூனந் தீண்டா. (51)

முன்னவரே வச்சிரமு முத்தும்—இகல்
முன்னவரே செம்மணிதுப் பொத்தும்—செட்டின்
மோக ரேபுருட ராக பேதகமும்
மூயும் வயி டூர்யம். (52)

---

(சந்தவரை வந்தகுக நாதா என்ற சந்தம்)

சந்தமணி முக்குணங்கள் தாமே—சொலிற்
தண்டளம் பச்சைபளிங் காமே—உயர்
சாத்துவிகம் மாணிக்கமுங் கோமே
தக மாமே துகிர் போமே—யாதி
சாற்றிவைகள் ராசதஞ்சொல் வாமே. (53)

---

50. புள்ளி, புள்ளடி, வேற்றுநிறம், தாாசம், கீற்று எனச்சொல்லப்படும் குற்றத்தினீங்கிக் குணத்தின் மேம்பட்டமாணிக்கத்தை அணிவோன் ஒருசிற்றரசனுயிருப்பினும் கடல்சூழ்ந்த ஞாலமுழுதும் அன்னவனையே வந்தடையும்.

51. இன்னும் மாணிக்கம்பூண்டவரை, பேய், எமவாதனை, நோய், விஷம் முதலியன அணுகாவாம்.

52. வயிரமும், முத்தும், பிர்மஜாதியென்றும், மாணிக்கமும், பவளமும் க்ஷத்திரியஜாதியென்றும் புருடராகம், கோமேதகம் வைஸ்யஜாதியென்றும், நீலமும், மரகதமும் சூத்திரஜாதியென்றும் சொல்லப்படும்.

53. முத்து, பச்சை, வயிரம் இவைகள் சாத்துவீக குணத்தைப்பொருந்தியனவென்றும், மாணிக்கம், கோமேதகம், பவளம் இவைகள் இராசதகுணம் பொருந்தியன வென்றும், நீலம், தாமதகுணம் பொருந்தியதென்றும் சொல்லப்படும்.

அந்தாணி தாமதமே சொற்றே—மினி
ஐபவொரு நீலமது மற்றே—மணி
ஆயுதின ஞாயிறுமு தற்றே
நிசை பெற்றே கனி கற்றே—ஒன்ப
தாமெனவே சொல்மணிய வற்றே. (54)

செம்பதும ராகமுதற் செப்பு—தா
ளம்பவளம் பச்சைபுரு டப்பு—ராகஞ்
சேர்வயிர நீலமிவை யொப்பு
இனுந்தப்பு மேதம் வெப்பு—ரவி
திங்கள்வயி டூர்யமதன் வைப்பு. (55)

இம்பரிவை யேமதிக்க நாடி—அமர்
யாவருமே சென்னிமலர் சூடி—தவி
சிட்டிடனைச் சுத்திபணிக் கூடி
துகில்மூடி ரவி மாடி—என
எண்மணிபுஞ் சூழநடு தேடி. (56)

தெய்வமணி மாணிக்கமுஞ் சேர்த்து—உபர்
செங்கதிரோ னுதியமே கோர்த்து—அதி
தேவதைக ளாகமனம் பார்த்து
மலர் தூர்த்து சலம் வார்த்து—பூசை
செய்தறிஞர் சொல்வர்விலை தீர்த்து. (57)

---

**54.** இரத்தினப் பரீக்ஷைக்குகந்த தினங்களாவன, ஞாயிறு, திங்கள் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய இத்தினங்களில் முறையே மாணிக்கம், முத்து, பவளம், பச்சை, புருடராகம், வயிரம், நீலம் இவைகளைப் பரீக்ஷிக்கவேண்டும். கோமேதகத்துக்கு ஞாயிறும், வைடூர்யத்துக்குத் திங்களும் உகந்த தினமாகும்.

56-57. இரத்தினம் பரீக்ஷிக்கப்புகும் அறிஞர்கள், சிகையிற் புஷ்பங்கள் சூடிக்கொண்டு, இடத்தைச்சுத்திசெய்து ஆசனமிட்டு, வஸ்திரத்தால் தரையைமூடி சூரியமண்டலம்போல ஏனைய எண்மணிகளுஞ்சூழ நடுவே தெய்விகத்தன்மை பொருந்திய மாணிக்கத்தை வைத்து, அஷ்டதிக்குப்பாலர்களாக சுற்றுமுள்ள எட்டு மணிகளையும் மனசில் பாவித்துத் தியானித்து புஷ்பம்சொரிந்து, ஜலம்வார்த்து, பூஜைசெய்து, பயபக்தியுடன் விலை மதிப்பார்கள்.

181027

எய்வகையு முத்தினிற்கி ரண்டாம்—அது
　　ஈர்ம்புனல்நி லத்தில்விளை வுண்டாம—நீரி
　இப்பிமுகில் சங்குகயற் குண்டாம்
　　சலங் கொண்டா மிவை யுண்டா—தலிற்
　　தான் சலச மென்னவிவை விண்டாம். (58)

வேறொருவ கைவிளையு முத்தே—கற்பிற்
　　கேறுமட வார்களின்க ழுத்தே—கொக்கு
　வேழமரி பன்றியர வத்தே
　　வெய்நெ லொத்தே கரும்பி டத்தே—யுற
　　மேதினியி லாகுந்தல சத்தே (59)

கூறியிடு முத்துவிளை வாலே—அது
　　மாறுநிறஞ் சொல்லும்வகை நூலே—கருங்
　கொண்டலது செங்கதிரைப் போலே
　　வளை சேலே நிரை யாலே—மதி
　　கொள்வெளுமை பாதிரியு மேலே. (60)

---

(சேங்கின்மாநகரந்தனில் மேவிய என்ற சந்தம்)

அந்தமாமர வந்தனில் மேவிய
　　ஆரமதே தருதேசு—புகழ்
　　சீரணி நீலமும் பேசு—வரும்
அங்கரும்புக யங்களேயவை
தங்குசெம்பொனி றங்கொளாயினி
அவ்வராகமு மேநெலும் வேயவை
　　ஆம்நிறஞ் சேயது வோமே—பச்சை
　　வானிழி கன்மழை போமே. (61)

C423:417 N24

---

58. முத்துவிளையுமிடம் இரண்டென்றும், அவை நிலத்திலும், நீரிலும் என்றும், நிலத்தில்விளையுமுத்து தலசமென்றும், நீரில்விளையுமுத்து சலசமென்றும் சொல்லப்படும்.

59. இன்னும் முத்தானது கற்புடைமாதர் கழுத்து, கொக்கு, யானை, சிங்கம், பன்றி, பாம்பு, மூங்கில், நெல், கரும்பு ஆகிய இவைகளினிடத்தும் உற்பத்தியாகுமென்றும், அவைகள் தலசம் என்றவகுப்பைச் சேர்ந்தவையென்றும் சொல்லப்படும்.

60. பொதுவகையான் முத்தின்நிறம், மேகத்தின்வெண்மை, சூரியப்பிரகாசம், மீன்நிறம், சந்திரப்பிரகாசம், பாதிரிமலர் இவைகளின் நிறத்தைப் பொருந்தும்.

61. சிறப்புவகையான் பாம்பிற்றோன்றும் முத்து நீலநிறமாகவும், கரும்பு, யானை இவைகளிற் றோன்றுமுத்து செம்பொன் நிறமாகவும், பன்றி, நெல், மூங்கில் இவைகளிற் றோன்றிய முத்து சிவப்புநிறமாகவுமிருக்கும்.

இந்தமாதா ளங்களி லேபுவி
    இங்கரி தேபெறல் சிங்கம்—கொக்கும்
    அங்கனை லாரிடம் புங்கம்—உற
இம்பரம்புவி தங்கியேவிளை
வுந்துமாதா ளங்களாமவை
எஞ்சுமாமதன் வான்குண மேபயன்
    இன்புட னேசொல்வ னீரே—இனி
    அன்புட னேகொள்ளு வீரே. (62)

திங்கள்வானது தங்கியமீனினஞ்
    சேர்ந்தது போலுறுந் தேசும்—கனம்
    ஆர்ந்துற லேமறு மாசும்—அறச்
செங்கணக்குபொ ருந்திலோகளி
தந்திலங்குப ளிங்கமோவென
சென்றுமேபுடை பிம்பமுமேதால்
    செப்புருவே யுருள் தேறு—குணம்
    ஒப்புவையே சொலு மாறு. (63)

அங்கண்ஞாலநி லந்தனில் நீரினில்
    ஆர்கலில் வாயுவி லேறும்—துகள்
    தீர்கய மேவியே கூறும்—குணம்
அந்தமிஞ்சிட வுந்துமாதா
ளங்களும்பெற வங்கமேயணி
அன்னதோர்பய னுலிவணையுற
    வாந்திரு மாதவள் நேசம்—உடன்
    போம்பெரு மூதையின் வாசம். (64)

---

62 சிங்கம், கொக்கு, கற்புடைமாதர் கழுத்து இவைகளிற்றோன்றும் முத்துக்கள் பெறுதற்கரியன.

63. முத்தின்குணம் ஆறு. அவையாவன: சந்திரமண்டலத்தில் நக்ஷத்திரகணங்கள் ஒன்றுசேர்ந்தாற்போன்ற ஒளி, உறுதி, குற்றமின்மை, பார்வைக்குஅழகு, பளிங்கமோவெனச் சுற்றுப் பக்கங்களில் ஒளிவீசுதல், உருண்டைவடிவம் ஆகிய இவைகள்.

64. மண்ணேறு, கல்லேறு, நீரேறு, வாயுவேறு ஆகிய இக்குற்றங்களினீங்கிக் குணத்தின் மேம்பட்டதாய் லக்ஷணமுள்ளதான முத்துக்களையணிவோர்க்கு அக்ஷணமே மூத்தவள்வாசம்நீங்க இளையாளாகிய லக்ஷ்மி வாசம் ஏற்படும்.

(வன்னத் தினைமாலைத் தெள்ளியே என்றசந்தம்.)

கொள்ளத்த கும்வயி ரங்களே—புவி
 யொண்டுவி ளைநக ரங்களே—திகழ்
 கோசல மாதியி டங்களே—உரைக்
குவமேயிவ ணிருநாலுறு
படமேவுத லுடனாறு
 கோணமு மேதா சங்களே—சுத்தி
 கூறிடு தாரைகு ணங்களே. (65)

விள்ளிற்று கள்பனி ரண்டுமே—யதில்
 வேண்டத்த காதவை யுண்டுமே—யவை
 விந்தொடு கீற்றதுங் கொண்டுமே—யுரை
விரிகாபத மலமேயிவை
நிறையேயிவை தருமோர்பயன்
 வெந்துய ரோடுயிர் விண்டுமே—நாக
 மேகிளை போகுமு ரண்டுமே. (66)

மன்னர்க்க ணிந்திடில் மன்னரே—உயர்
 மாமறை யோர்க்குறில் அன்னரே—எழு
 மையிலு மாகுவர் பின்னரே—பெற
வருவார்வணி கருமேகடை
யுறுவார்முறை திருவோடுநெல்
 வந்துற வேயவிற் பன்னரே—குண
 வச்சிரத் தாம்பய னுன்னரே. (67)

---

65. வயிரமானது கோசலம் ஆதிஇடங்களில் விளையும். அதற்கு, எட்டுப்பட்டம், ஆறுகோணம், தாசம், சுத்தி, தாரை ஆகியஇவைகள் விசேஷ குணங்களாகும்.

66. வயிரத்துக்குக்குற்றம் பன்னிரண்டென்றும், அவைகளில்விரும்பத் தகாதவை விந்து, கீற்று, காகபாதம், மலம்ஆகிய இவையென்றும், இவைகளின் தீப்பயன்முறையே கொடூர்துன்பம், உயிர்போதல், ஆடையாபரணம் சுற்றம் இழத்தல் இவைகளென்றும் சொல்லப்படும்.

67. உத்தமவயிரத்தை மன்னர்கள் அணிந்தால் மன்னர்களாகவும் அந்தணர்கள் அணிந்தால் அந்தணர்களாகவும் எழுபிறப்பிலும் பிறப்பார்என்றும், மற்றைய வைசிய சூத்திரரணிந்தால் அஷ்டைஸ்வரியங்களுடன்வாழ்வாரென்றும் வயிரத்தின்பலன் சொல்லப்படும்.

சன்னக்க திர்வயி ரத்தையே—முதற்
சாதியெ னக்கொளு முத்தையே—யாதி
சாற்றுமற் றைரத்தி னத்தையே—துளை
தாமேவுகருவியாயது
தன்னையேதுளை யிடுமோர் திறல்
தானுற லாலத்தி றத்தையே—கொடு
சாலவு றும்முதன் மைத்தையே. (68)

---

(சேன்னிகுளநகர் வாசன்) என்ற சந்தம்.

மன்னும் மாகதத் தோற்றம் —சொலில்
மாண்புறு மேபல மாற்றம் —குண
வகைசொற்றிடி னுடல்முற்றொளி
பசுமைக்கதிர் சரையற்றுறல்
மன்னல் ஒளி மின்னல். (69)

இன்னும யிற்கழுத் தோடே—பயி
ரேபொன்மை பாயுதல் நாடே —பொன்னின்
எழிலாரு பதமேயுடை
வயிரேகிகர் தாலாமிவை
எட்டே முறை தொட்டே. (70)

குற்றமு மொன்றுட னுறே—அவை
கூறுகல் மண்வளி யேறே —இனுங்
கொளுவாய்கரு கலுமேவெளு
மையினேடிறு குதலாமிவை
கோடே தா சோடே. (71)

---

68 ஏனைய இரத்தினங்களையெல்லாம் துளையிடுகருவியாகவும் தன்னைத்தானே துளைக்குந்திறம் பெற்றும்இருத்தலால்வயிரத்தையேமுதற்சாதியென்றுசொல்லப்படும்.

69. மாகதத்தின் தோற்றம் பலவகையாகச் சொல்லப்படும். மாகதத்தின்குணம், உடல்முற்றும் ஒளிவீசுதல், பச்சைநிறம் கொண்டிருத்தல், சரையில்லாதிருத்தல், மின்னல்போன்ற ஒளிவீசுதல், மயிற்கழுத்து, பசும்பயிர், பொன்னிறம் பொருந்தியிருத்தல், ஒளிபாய்தல், பொன்வண்டினிறம் பொருந்தியிருத்தல் ஆகிய இவைகளாம்.

71. மாகதத்துக்குக்குற்றம் எழு. கல்லேறு, மண்ணேறு, காற்றேறு, கருநிறங்கொள்ளல், வெளுத்தல், இறுகுதல். தாசு.

மன்னும் மரகதம் பூண்பார் —பயன்
மன்னா சாகவே காண்பார்—இனி
வலனுாிரு விழியாமென
வுரைநீலம நிறமேகுண
மன்றே பதி னென்றே. (72)

கொண்டல வுரியுங் காயா —நெய்தல்
குவளைபாய் பத்திபு மேயா—வுடன்
குயின்மேவிய மிடறேதுள
சியுமாதரு கணுமேவுகண்
கொண்டே கவின் வண்டே. (73)

உண்டிதத் குற்றுள புரையே—இட்ட
மோடுவச் சஞ்சரு சரையே—யிவை
யுடனேயணி தாசேபிணி
ரசமேமுகி லெனவாமிவை
யொட்டே எண்ணில் எட்டே. (74)

ஈண்டிதி லேமுறை மூலம் —உள
இந்திர நீலமா நீலம்—என
இருசாதிக ளதிலேயிமை
யவர்கோனது மிகவேவிலை
இன்னும் பின்னர் மன்னும். (75)

எண்டகு மாநீலம் நாடில்—அதை
இன்பசும் பாற்குடம் போடில்—குடம்
இருபாலது முழுதேயத
னிறமேவிடு மிதுவேபெறில்
என்றும் சேமம் துன்றும். (76)

---

72. மரகதம் பூணுவார் அரசராக அமைவார்.

73. நீலத்தினிறம் பதினென்று; அவையாவன: மேகம், அவுாி, காயா மலர், கருநெய்தல், கருங்குவளை, பத்தி, பசுவின்கழுத்து, குயிற்கழுத்து, கருந்துளசி, யானைக்கண், வண்டுக்கண்.

74. மரகதத்துக்குற்றம், இட்டம், மோடு, வச்சம், சருசரை, தாசு, பிணி, ரசம், முகில் என எட்டாகும்.

75. இந்திர நீலமென்றும், மாநீலமென்றும் இருவகை சொல்லப் படும். அவற்றில் இந்திரநீலம் விலையதிகம்.

76. மாநீலத்தின்குணம் பசும்பாற்குடத்திற் போட்டால் பால்முழுதும் நீலநிறமாய்விடும். அத்தகைய நீலம் அணிவாரிடத்து என்றும் சேமமே தோன்றும்.

(பாதிராத்திரிவேளையில் வந்து என்றசந்தம்.)

ஆயமாமணி யாமிதிற் சொன்ன
ஐந்துமே தவிர்ந் தேலும் —துகிர்
ஆதியே யுரை நாலும் —ஒளி
ஆயினும் பிற போலும் —விலை
அற்பமேபெறு மூற்றவைவெளி
ஆக்குவன் முறை யாலும். (77)

மேயமேதகங் கோசலம் நெய்யும்
வேரியம் இவை நேர —செம்மை
மேவுபொன்னிற மார—உற
மெல்லிதாய்த்துகள் தீர —பெறில்
மேன்மையே குணம் பூணுவார்பயன்
வெந்துறும் பவ சாரம். (78)

பொன்னெடேயழல் போலவேயொளி
புகுந்துமே புடை சூழ்ந்தும்—உச்சி
புனையவே வட்ட மேய்ந்தும்—சரை
புரைகளா மிவை தீர்ந்தும் —ஒளி
புருட ராகமு மணியி லேபகை
பொன்னுமே செய மார்ந்தும். (79)

---

77. மாணிக்கம், வயிரம், மரகதம், முத்து, நீலம் ஆகிய ஐந்தும்ஒழிந்த ஏனைய நான்கு இரத்தினங்களுக்கும் விலை அற்பமேயாகும்.

78. கோமேதகம், கோசலம், நெய், தேன் இவைகளினிறம் பொருந்துமென்றும், செம்மையோடுங்கூடிய பொன்னிறம் அமைய மென்மையாகவும் குற்றத்தினீங்கியதாய்ப்பெறில் மேன்மையானகுணமென்றும், அணியில் பாவங்கள் நீங்கும் என்றும் கொள்க.

79. பொன்னிறம், அக்கினி இவைகள்போல பிரகாசமுடையதாய் பக்கம் சூழ்ந்தும் உச்சிவட்டம் அமைந்தும் சரை, புரையென்னும் குற்றம் நீங்கியும உள்ள புருடராகமணிவோர் பகைவர் தோல்வியடைய என்றும் செயமே அடைவார்.

மன்னுபூ னையின் கண்ணுமே மற்றும்
மஞ்ஞையின் பிடர் மூங்கில்—இலை
வழுத்துமிந்திற மோங்கி—கனம்
வண்மையுஞ் சரை நீங்கி—ஒளி
வலத்தி லாயினு மிடத்தி லாயினும்
வதியிலே திரை தாங்கி. (80)

மாசிலாவயி டூரிய மதன்
மாண்பிவை பெறக் கூடும்—இடம்
மகதமே யாதி நாடும் —தீபம்
வான்கட விடி யூடும்—இதை
மானிலம்பெறிற் பூசையோடணி
வார்களேபணி வோடும். (81)

தேசுமேபவ ளங்களுக்கிவண்
செவ்வியே செவ்வ ரத்தை—மலர்
செய்யநாசியுந் தத்தை—யுடன்
செப்புவார்முருக் கத்தை—இவை
சேரவேயணி மாதர் மேவுவர்
சேயராம் பாக்கி யத்தை. (82)

கோணலேபுழு வீருதல்முகங்
கொண்டுமே விள்ளல் இன்ன—மூன்று
குற்றமே துகிர்க் கென்ன—முறை
கூறுமே யின்னு மன்ன—துகிர்க்
கோவையாதிகள் மேவுவார்மிகக்
கோதையார் கவின் மன்ன. (83)

---

80. பூனைக்கண், மயிற்கழுத்து, மூங்கிலிலை இவைகளின் நிறம் பெற்றும் கனம்,வன்மை, சரை இவைகள் நீங்கியும் வலத்திலாயினும் இடத்திலாயினும் திரையோடிவீசில் உத்தமமான வயிடூரியமென்றும் இதைப்பெறில் பூசித்து மிக்கபணிவோடு அணிவார்கள்.

81. கொவ்வைக்கனி, செவ்வரத்தமலர், கிளி மூக்கு, முருக்கமலர் இவைகளின் நிறத்தோடுகூடியதான பவளத்தை அணியும் மாதர்கள் புத்திர பாக்கியத்தை அடைவார்கள். பவளத்துக்குக்குற்றம் கோணல், புழுவீர்தல், முகம்விள்ளல் எனக்குற்றம்மூன்று. இப்பவளங்களைக் கோவையாக மாதர்கள் அழகுக்காக அணிவார்கள்.

காணவேபுவி மேவுசூரிய
காந்தமே சந்த்ர காந்தம்—இவை
காட்டிய வொன்ப தேய்ந்த —மணிக்
கண்ணடங்கியே போந்த —என்ற
காரணங்கொடே யீண்டுரைத்திலம்
கண்டுகொள் மன மாய்ந்து. (84)

---

(பூமிமேச்சிடுமண்ணுமலைக்குதவு என்ற சந்தம்.)

மாமணிக் குவைகள் கோமகற்குதவ மன்னியே
அருள் துன்னியே விலை யுன்னியே —இங்ஙன்
வணிக ராகிவரு கடவுளா ரிவைகள் பன்னியே. (85)

காமருற்றமணி தாமெடுத்திருகை விழ்த்தினர்
துதி தாழ்த்தினர் பாத் தாழ்த்தினர்—இரு
காங்கள் கூப்பியிள வரசை யோம்பவென வாழ்த்தினர். (86)

ஆயுளோடுதன தானியம்பிறவு மோங்கவே
புவி தாங்கவே யிசைவீங்கவே—என்ன
ஆசியோதியிட நேசமாயரசு வாங்கவே. (87)

சேய தாமரையி ணுய கைகளுடன் சோவே
களி கூரவே யின்னல் தீரவே—பெறத்
தேவராம் வணிகர் மேவியே புகல்வர்சாரவே. (88)

தொக்க வேயமைச்சர் பக்க மேவமுடி சூட்டுவீர்
மணி பூட்டுவீர் இவை கூட்டுவீர்—இனித்
தோன்று போபி ஷேக பாண்டியன் நாட்டுவீர். (89)

நக்க ரரம் வணிக ருக்கு மாயவில்ல நல்கவே
தன மல்கவே தா வொல்கவே—முன்னம்
நகைப ரும்பியா சுகவி ருந்தவர்முன் செல்கவே. (90)

மாசி லாதவணி கேச ராகுமறை வாயினர்
மறை வாயினர் உரு வாயினர்—உமை
மங்கை யாளுடன்வி ளங்கு கோயிலினுட் போயினர். (91)

---

84. சூரியகாந்தம், சந்திரகாந்தம் என்பவை மேற்சொல்லிய ஒன்பது மலர்க்கண்ணே அடங்கப்பெற்றவையாகும்.

தேசு முற்றுமணி பேசி விற்றவரிச் சீலரே
விடை மேலரே உமை கோலரே—எனச்
செப்ப மந்திரிக ளொப்ப வேயாசு பாலரே. (92)

ஐயனே யடிய னுய்யுமா றருளி யாண்டவா
மதி பூண்டவா திருத் தாண்டவா—இதற்
காங்கை மாறெதுவு மீங்கெ தோபுகல்வன் நீண்டவா. (93)

வைய மேவுபொருள் நைய மூனுயிர்கள் யாவுமே
உனை மேவுமே யினித் தாவுமா —முகில்
வாரி சிந்துபுன லோரி றந்தெதது பூவுமே. (94)

---

(ஆறுமுகவடிவேலவனேகலியாணமும் என்ற சந்தம்)

கோமக னுருமிவ் வாசக மேவியே
கூவிப்பு கழ்ந்து மற்றே —அங்கு
கூடிய ஆன்றவர் பீடுறு மாசிகள்
கூறப் புனைந்து பெற்றே. (95)

ஏமமு றவிடை யானுமை பாகராம்
ஈசர்ப தம்ப ணிந்தே—அர
சிச்சையு டன்பிர தக்ஷிண மும்பெற
ஏகும்வி டைய ணிந்தே. (96)

மாமணி நூல்வழி யாய்பவ ரேனைப
மந்திரி மார்கள் பின்னர் —மணி
வரங்கிக்கு ணங்களி லோங்கித் து லங்கவும்
வாழ்த்திடு வார்க ளின்ன. (97)

தூமணி யீந்தவர் சுந்தர ராதலிற்
சூரிய ராதி கொண்டே—நவ
சுத்தமும் தூக்கிய ரத்தின மாக்கியே
தோன்றினர் போலும் விண்டே. (98)

நன்னய மாகவே யன்னவர் மார்பணி
நாகமு மிழ்மணியோ—இனி
நாமிதை யாதென வோதவல் லேமிது
நாதன ருள்துணியோம். (99)

இன்னவை யேகீர் மாமணி தேடிடில்
இந்திர நாட்டு மில்லை—என
இத்துணை பேசிய மைச்சர்கள் சிற்பருக்
கேவினர் தூது வல்லே. (100)

இங்கித மர்கவே வேண்டும்பொ ருள்களை
யீயப்பொற் கொல்லர்களே—முடி
இன்புட னேயமு கும்பெற வேதா
வேமறை வல்லர்களே. (101)

மங்கல நாளது வோதவே மாமுடி
மன்னா ணிந்துறவே—உடன்
மாமறை யோர்களு மாசிகள் கூறிட
மந்திரர் வந்திடவே. (102)

நாயக னாருள் போபி டேகனும்
நாமம்வி ளங்கமன்னன்—நகர்
நண்ணிவ லம்வந்து கண்ணுதல் கோயிலை
நாடிப்ப ணிந்து பின்னர். (103)

போயுறை மேவியே மன்னுயிர் தன்னுயிர்
போலவொ ருகுறையும்—இன்றி
புங்கமு றவர சம்புவி யாண்டனன்
போற்றிம னுமுறையும். (104)

இன்னண மேயபி டேகனும் பாண்டியர்
இன்புற வாழவுமே—முனம்
எள்ளித்த னங்களைக் கொள்ளைகொண் டோடுவர்
ஏற்றங்கள் தாழவுமே. (105)

மன்னவ னாணையி லொற்றரு மேவியம்
மாற்றவ ரைக்கொணர்ந்து—விட
மாமுடி யாதிய வேந்துமே வாங்கியும்
வாழ்ந்தன ரேமகிழ்ந்து. (106)

---

(மஞ்சுநிகர் குந்தளமின்னே என்ற சந்தம்)

சந்தமுரு கேசரும் வாழி
சகமடியார் துயர்களையுஞ்
சாமி சுந்தரேசரும் வாழி—மணி
தந்துமேவிடு சுந்த ரேசர்பொ
ருந்து போரு ளுந்து பாண்டியர்
தங்கள் கோனபி டேகனும்வாழி
தமிழ ணங்கு வளரு சங்கந்
தருமதுரை வாழி வாழியே. (107)

சிந்தைவடி வேலவ னேசன்
திருமதுரை யெனுநகாஞ்
சேர்ந்துறையுஞ் சண்முகதாசன்—சொல்லுஞ்
சிந்து மேதினி வந்து லாவிட
இந்துசூடியை யுந்தியேதுதி
செய்கு வமே வாழ்த்தி வாழியே
சிறுவருற்ற பிழைபொ றுத்தே
சீர்மைபெறச் செய்வர்வாழியே. (108)

——

O23:417
N24

181027.